**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr.P.C.**)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR.**

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 75 of 2022

Depositions of PW -4 witness for ________ Prosecution / Defence / Court

Name : பாலு

Father's Name : நடராஜ்

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th **day of August** 2025.

**(எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

1. நான் தற்போது பாரதிபுரத்தில் குடியிருந்து கொண்டு டெம்போ ஓட்டி வருகிறேன். சம்பவத்தில் காயமடைந்த செந்தில்குமார் என்பவரை எனக்கு தெரியும். 05.01.2020 தேதி மாலை சுமார் 7 மணி அளவில் நானும் என்னுடைய நண்பர் சதீஷ்குமார் என்பவரும் பள்ளபாளையம் பஞ்சாயத்து அலுவலகத்திற்கு முன்பாக நின்று பேசிக் கொண்டிருந்த பொழுது சதீஷ் என்னிடம் வந்து காரில் வந்து யாரோ செந்தில்குமரை கீழே தள்ளிவிட்டு சென்றதாக என்னிடம் சொன்னார். நான் சென்று பார்க்க செந்தில் குமாரின் முகம் வீக்க காயத்துடன் இருந்தது.

2. நானும் சதீஷும் செந்தில்குமாரை சதீஷுக்கு தெரிந்தவர் காரில் கோவை அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். செந்தில்குமார் என்பவருக்கு ஒரு மாதத்திற்கு முன்பு மற்றொரு நபர்களுக்கும் பிரச்சனை ஏற்பட்டு விட்டதாகவும் அவர்கள் தன்னை தாக்கியதாக கூறினார். அவர்களை நான் பார்த்தது கிடையாது. அவர்கள் பெயரும் எனக்கு

தெரியாது. செந்தில்குமார் வாகனத்தை நிறுத்தியது சம்பந்தமாக பிரச்சனை நடந்ததாக கூறினார்.போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் குறுக்கு விசாரணைக்கு போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை மேற்கொள்ளவில்லை. குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை** இல்லை

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2025.08.07 19:20:02 +0530

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**